பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 05 புதன்கிழமை 24.08.2022 கதிர் 180

## சர்வகட்சி அரசுக்கு சாத்தியம் இல்லை

### விமல் எம்.பி. கூறுகின்றார்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதலைமையில் சர்வகட்சி அரசு உதயமாவ தற்கான சாத்தியம் குறைந்து விட்டது.

☞2

# கோட்டா நாடு திரும்புவதால் ரணிலுக்குக் கடும் நெருக்கடி



## அவர் துணிச்சலுடன் சமாளிப்பார் என்று இந்திய ஊடகம் தெரிவிப்பு

சீர்குலைந்துள்ள இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் கடினமான பணியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே எதிர்கொண்டுள்ளார். இந்தநிலையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வருகை, அவருக்குத் தலைவலியை ஏற்படுத்தும் செயலாகவே இருக்கும் என்று இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிணை எடுப்பு நடந்து கொண்டிருக்கின்றது. இதற்குச் சில காலங்கள் எடுக்கலாம்.

☞2

## 'எங்கள் மக்கள் சக்தி' கட்சியின் தலைவர் கைது!

### - கொலையாளிக்கு அடைக்கலம் கொடுத்தாராம்

எங்கள் மக்கள் சக்தி கட்சியின் தலைவர் சமன் பெரேரா தங்காலைப் பொலிஸாரால் இன்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.



கடந்த ஜூன் மாதம் 5 ஆம் திகதி குடாவெல்ல பகுதியில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபருக்கு அடைக்கலம் கொடுத்த குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

## மீனவர்களுக்கு நிவாரணம்

### ஜனாதிபதி இணக்கம் என்கிறார் டக்ளஸ்

கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்புக்கு விரைவில் ஏற்பாடுசெய்யப்படும்எனத்தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மண்ணெண்ணெயின் விலை அதிகரிப்பைக் கடற்றொழிலாளர்கள்சமாளிக்கும்வகையில்நிவாரணம் வழங்குவதற்கும்



☞2



## கம்பஹாவில் ஒருவர் சுட்டுப் படுகொலை!

கம்பஹாவில் நபர் ஒருவர் இன்று சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் ஊடகப்பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளது.

கம்பஹா - பட்டபொத்த பகுதியில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான குறித்த நபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது உயிரிழந்த நிலையில் காணப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளார்.

## சர்வதேச ஆதரவை இழக்கும் இலங்கை

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் எச்சரிக்கை



மின்சாரக் கட்டணம் பாரிய அளவில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ள நிலையில் மக்களின் வாழ்க்கையும் பாரிய சவால்களுக்கு முகம்கொடுக்கவேண்டியுள்ளதாக மாறியுள்ளது.

-இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர்சஜித்பிரேமதாஸதெரிவித்தார்.

மின்சார பாவனையாளர் சங்கத்தின் விசேட சந்திப்பில்

☞2

## கொரோனா படுதீவிரம்; அரசு அசமந்தப்போக்கு

### உபுல் ரோஹன குற்றச்சாட்டு



இலங்கையில் கொரோனா பரவல் எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் சமூகத்தில் அடிமட்டத்திலிருந்து அதிகரித்துள்ளது. இருப்பினும் இந்தக் கொரோனா நிலைமை மற்றும் காய்ச்சல் பாதிப்புக்களை சுகாதார அமைச்சகம் மற்றும் அரசு கருத்தில் கொள்ளவில்லை.

☞2

## 'மொட்டு'க் கட்சிக்குள் மாற்றம்; டலஸ் அணியினருக்கு வேட்டு

### உறுதிப்படுத்தினார் சாகர

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பதவி நிலைகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று கட்சியின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் எம்.பி. ஊடகங்களிடம் தெரிவித்தார்.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள

☞2



## காரைநகர் பிரதேச சபை மீண்டும் கூட்டமைப்பிடம்

### புதிய தவிசாளராகப் பாலச்சந்திரன் தெரிவு

யாழ்., காரைநகர் பிரதேச சபையின் புதிய தவிசாளராகத் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் உறுப்பினர் க.பாலச்சந்திரன் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். தவிசாளராக இருந்த சுயேச்சைக்குழு உறுப்பினர் மயிலன் அப்பாத்துரை தனது பதவியை இராஜினாமா செய்ததமையால்

☞2

## யாழில் மூதாட்டி பஸ்ஸுக்குள் திடீர் மரணம்

யாழ்ப்பாணத்தில் இருந்து பஸ்ஸில் கொடிகாமம் சந்தைக்குத் தேங்காய் கொள்வனவு செய்யச் சென்ற மூதாட்டி திடீர் நெஞ்சு வலி காரணமாக உயிரிழந்துள்ளார்.

யாழ்., குருநகர் பகுதியைச் சேர்ந்த செபநாயகம் செல்வமலர் (வயது 64) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

☞2

# யாழ்.பல்கலையில் பகிடிவதை உச்சம்

## ஒரு மாத காலப் பகுதிக்குள் மட்டும் 21 மாணவர்களுக்கு வகுப்புத் தடை

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் புதுமுக மாணவர்களைப் பகிடிவதைக்கு உட்படுத்தும் சிரேஷ்ட மாணவர்களுக்கு எதிராக பல்கலைக்கழக நிர்வாகம் வகுப்புத் தடை விதித்து வருகின்றது. கடந்த ஒரு மாத காலப் பகுதிக்குள் 19 கலைப்பீட மாணவர்கள் உள்ளிட்ட

☞2



## கொரோனா படு தீவிரம் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு பொதுச்சுகாதார பரிசோதகர்கள் ஒன்றியத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

தடுப்பூசி திட்டத்தால் ஏற்பட்ட நோய் எதிர்ப்பு சக்தியால் கொரோனா நோய் ஓரளவு கட்டுக்குள் வந்தது. எனினும், எந்த நேரத்திலும் பேரழிவு நிலை உருவாகலாம்.

கிராமப்புறங்களில் கண்டறியப்பட்ட காய்ச்சல், பெரும்பாலும் கொரோனாப் பாதிப்புக்களாகவே அடையாளம் காணப்பட்டன.

இருப்பினும் இந்தக் கொரோனா நிலைமை மற்றும் காய்ச்சல் பாதிப்புக்களை சுகாதார அமைச்சகம் மற்றும் அரசு கருத்தில்கொள்ளவில்லை.

எனவே, கொரோனா பரவல் எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் சமூகத்தில் அடிமட்டத்திலிருந்து அதிகரித்துள்ளது.

பாதிக்கப்பட்ட மாணவர்களைப் பாடசாலைகளுக்கு அனுப்புவதால் பாடசாலைகளில்கொரோனாபாதித்தமாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

எந்தவொரு சுகாதார வழிகாட்டுதல்களுக்கும்ஆலோசனைகளுக்கும்உரிய கவனம் செலுத்தப்படாமல் பல சமூகக் கூட்டங்கள் இப்போது நடைபெறுகின்றன.

இந்தநிலையில், கொரோனா வைரஸ் மீண்டும் பரவினால், இது போன்ற நிகழ்வுகளை ஏற்பாடு செய்த அமைப்பாளர்கள் மீது எமது தொழிற்சங்கம் சட்ட நடவடிக்கை எடுக்கும் - என்றார்.

## மீனவர்களுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி இணக்கம் தெரிவித்திருக்கின்றார் எனவும் கூறினார்.

ஜனாதிபதியின் ஒருங்கிணைப்பாளரின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் உள்ள கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு நேற்று இடம்பெற்றிருந்தது.

இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகள், தமது தொழில் செயற்பாடுகளுக்குத் தேவையான மண்ணெண்ணெய் மற்றும் டீசல் போன்றவை தாராளமாகக் கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்தியதுடன், மண்ணெண்ணெயின் விலையேற்றம் தொடர்பிலும் மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்றும் கேட்டதுடன், ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை முன்வைத்திருந்தனர்.

இந்நிலையில், நேற்று மாலை, குறித்த விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கும் கடற்றொழில் அமைச்சருக்கும் இடையிலான கலந்துரையாடலில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதன்போது கடற்றொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, அவை தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கேட்டுக்கொண்டார்.

அதேவேளை, அண்மைய நாள்களில் அதிகரித்துள்ள இந்தியக் கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய சட்ட விரோத தொழில் நடவடிக்கைகள் தொடர்பாக இந்திய மத்திய மற்றும் மாநில அரசுகளுடன் கலந்துரையாடி தீர்க்கமான முடிவைக் காண்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாகவும், விரைவில் இந்தியக் கடற்றொழிலாளர் விவகாரத்திற்கு தீர்வு காணப்படும் எனவும்அமைச்சர்டக்ளஸ்தேவானந்தா தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கோட்டா நாடு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு மத்தியில் இந்தியாவும் சீனாவும் வெவ்வேறு பக்கங்களில் இழுத்துக்கொண்டிருக்கின்றன.

இதன்போது இரண்டு பாரிய நாடுகளுக்கிடையில் கொழும்பு இறுக்கமான கயிறு நடையை நடத்துகின்றது.

இதனையெல்லாம் ரணில் விக்கிரமசிங்கசமாளித்துக்கொண்டிருக்கும்போது போதாக்குறைக்குக் கோட்டாபயவும் நாடு திரும்புகின்றார்.

கோட்டாபயவுக்காக ரணில் என்ன செய்தாலும் விமர்சிக்கப்படுவார்.

பொதுமக்களில் பெரும்பாலானோர் ரணிலைக் கோட்டாவின் மனிதராகவே கருதுகின்றனர்.

எனவே, ரணில் துக்கத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். ஆனால், அவர் ஒரு புத்திசாலி அரசியல்வாதி. இந்தத் தந்திரமான பிரச்சினையைத் துணிச்சலுடன் சமாளிப்பார் என்று இந்திய ஊடகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## காரைநகர் பிரதேச......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தவிசாளர் பதவி வெற்றிடமாக இருந்தது. புதிய தவிசாளர் தெரிவு நேற்று பிரதேச சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிரஞ்சன் தலைமையில் இடம்பெற்றது.

அதன்போது , ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஆகிய இரு கட்சிகளினதும் தலா இரு உறுப்பினர்கள் சபைக்குச் சமுகமளிக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூன்று உறுப்பினர்களும் , சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்களும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் ஒரு உறுப்பினருமாக 7 உறுப்பினர்கள் சபைக்குச் சமூகமளித்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து தவிசாளர் தெரிவு ஆரம்பமானபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் விஜயராசா , சக உறுப்பினர் பாலச்சந்திரனைத் தவிசாளராக முன்மொழிந்தார். அவருக்கு எதிராக வேறு பெயர்கள் பிரேரிக்கப்படாமையால் பாலச்சந்திரன் போட்டியின்றி ஏகமனதாகத் தவிசாளராகத் தெரிவாகினார்.

## யாழ்.பல்கலையில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

21 பேருக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ள மாணவர்கள், தடைக் காலத்தில் பல்கலைக்கழக வளாகத்துக்குள்ளோ, மாணவர் விடுதிக்குள்ளோ உட்பிரவேசிக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கலைப்பீட புதுமுக மாணவன் ஒருவரைப் பாலசிங்கம் விடுதியில் வைத்து பகிடிவதைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் சிரேஷ்ட மாணவன் ஒருவருக்கு விசாரணைகள் முடிவடையும் வரை தற்காலிக வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, விஞ்ஞானபீட புதுமுக மாணவன் ஒருவரை பல்கலைக்கழக வாயிலுக்கு அருகில் பகிடிவதைக்கு உட்படுத்தித் தாக்கிய குற்றச்சாட்டில் விஞ்ஞானபீட சிரேஷ்ட மாணவர்கள் இருவருக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த மாதம் தெல்லிப்பளை பகுதிக்குப் புதுமுக மாணவர்களை அழைத்துப் பகிடிவதைக்கு உட்படுத்தினார்கள் எனும் குற்றச்சாட்டில் கலைப்பீடத்தைச் சேர்ந்த 18 மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தை சம்பவங்கள் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் பூர்வாங்க விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## சர்வதேச ஆதரவை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்நாட்டிலுள்ள சாதாரண மக்களின் வாழ்வுரிமையைப் போன்று பாவனையாளர்களின் உரிமைகளையும் பாதுகாப்பதற்கு எதிர்க்கட்சி என்ற வகையில் முன்நிற்கின்றோம்.

நாட்டில் ஜனநாயக ரீதியில் போராட்டம் நடைபெற்றது. வீதியில் போராட்டம் நடத்துவது கூட பயங்கரவாதச் செயலாக கருதப்படுகின்ற காலகட்டமாக இருக்கின்றது. கூட்டங்கள், அமைதியான போராட்டம் மற்றும் பேச்சுச் சுதந்திரம் ஆகியவை அரசமைப்பில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆனாலும், நாட்டு மக்களை மிகப்பெரிய ஆபத்தில் தள்ளும் பல கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இது தொடர்பில் சர்வதேச சமூகம் மற்றும் அமைப்புக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வரும் நிலையில், எதிர்வரும் காலங்களில் சர்வதேச நிவாரணங்கள் கூட கிடைக்காமல் போகலாம். இதனால் நாட்டு மக்கள் பெரிதும் பாதிக்கப்படலாம்.

அரசு பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி அப்பட்டமாக மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுகின்றது - என்றார்.

## மொட்டு கட்சிக்குள்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் மாநாட்டின்போதே இந்த மாற்றங்கள் வரவுள்ளன என்றும் அவர் கூறினார். சிறிலங்கா பொதுஜன பெரமுன அரசியல் ரீதியாக மேற்கொண்ட தீர்மானங்களுக்கு எதிராகச் செயற்பட்டு, தற்போது கட்சியில் முக்கிய பதவிகளில் வகிப்பவர்களை அந்தப் பதவிகளில் இருந்து நீக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

சாகர காரியவசத்தின் அறிவிப்பின்படி கட்சியின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ், டலஸ் அழகப்பெரும உள்ளிட்ட டலஸ் ஆதரவு அணி உறுப்பினர்களின் பதவிகள் பறிக்கப்படவுள்ளன. அத்துடன், மொட்டுக் கட்சியில் முக்கிய பதவி ஒன்று நாமல் ராஜபக்ஷவுக்கு வழங்கப்படவுள்ளது. தலைமைப்பதவியில் மஹிந்த ராஜபக்ஷ தொடர்வார்.

## சர்வகட்சி அரசுக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ச எம்.பி. தெரிவித்தார்.

சுயாதீன அணிகளுக்கிடையிலான விசேட கூட்டம் கொழும்பில் நேற்றிரவு நடைபெற்றது. அந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே விமல் வீரவன்ச மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமையை கருதியாவது, ஒன்றிணைந்து பயணிக்கும் மனநிலை நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளுக்கு இல்லை.

ஜனாதிபதியும் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. எனவே, சர்வகட்சி அரசு சாத்தியப்படாது. தற்போதைய அரசு, தொடர்ந்து பயணிக்கவே முயற்சிக்கின்றது - என்றார்.

## யாழில் மூதாட்டி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த மூதாட்டி நேற்று பஸ்ஸில் பயணித்துக்கொண்டிருந்த வேளை, திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டு பஸ்ஸுக்குள் மயங்கிச் சரிந்துள்ளார்.

அதையடுத்து சாரதி, பஸ்ஸில் மூதாட்டியை சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதிலும் , மூதாட்டி ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று வைத்தியர்கள் அறிக்கையிட்டனர்.

மூதாட்டியின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சாவகச்சேரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நீதி உரைக்கத் தகுதியற்றோர்

'தனக்குத் தனக்கு என்றால் சுள்கு படக்குப் படக்கு என்று அடிக்குமாம்' என்பார்கள்.

பொதுவாகத் தென்னிலங்கையும் இந்தப் போக்குக்கு விதிவிலக்கல்ல.

இப்போது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கு எதிராக அது துடிக்கும் துடிப்பைப் பார்க்கும் போது அப்படித்தான் எண்ணத் தோன்றுகின்றது.

கடந்த 44 வருடங்களாக இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக இந்தச் சட்டம் கட்டவிழ்த்து விடப்பட்டது. வெறி நாயைக் கட்டவிழ்த்து விட்டமை போல இந்தக் கொடூர – குரூர – மனிதாபிமானமேயில்லாத – காட்டுமிராண்டித்தனமான – வெறிச் சட்டம் இலங்கைத் தமிழர்கள் மீது, குறிப்பாக வடக்குக் கிழக்குத் தமிழர்கள்மீது இலக்கு அது ஏவி விடப்பட்ட போது, தமிழர்களை, விசேடமாகத் தமிழ் இளைஞர்களை, அது கடித்துக் குதறி, துவம்சம் செய்தது. பல்லாயிரம் தமிழ் இளைஞர்களின் வாழ்வை பேரவலத்துக்குள் ஆழ்த்தி இச்சட்டம் நாசமாக்கிய போது, மௌனம் பேணி அல்லது அந்தச் சட்டத்துக்காக நியாயம் பிளந்து, அந்தக் கொடூரத்திற்கு பௌத்த, சிங்களப் பேரினவாதம் துணை போனது. ஏன், தமிழர் அல்லாத சிறுபான்மையினர் கூட பல சமயம் 'மௌனம் சம்மதத்துக்கு அறிகுறி' என்பது போல அந்தச் சட்டத்துக்கு ஆதரவாக நடந்து கொண்டனர்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர்தான் அவர்களில் பலருக்கும் இந்தச் சட்டத்தின் குரூரம் – காட்டுமிராண்டித்தனம் – புரிந்தது. அவர்கள் பட்டுத் தெளியும் சூழல் ஏற்பட்டது.

இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்து, ஓரினத்தின் இரண்டு தலைமுறைகளையே நாசம் செய்த பின்னர், இப்போதுதான் அந்தச் சட்டம் அதைக் கொண்டு வந்த பௌத்த, சிங்களப் பேரினவாதப் பக்கமும் தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கி இருக்கின்றது.

'தனக்கு வந்தால்தான் தெரியும் தலையிடியும் காய்ச்சலும்' என்பது போல சிங்கள மக்களும் இந்தச் சட்டத்தின் அநீதிப் போக்கு – கொடூரம் – இப்போதுதான் புரிய தொடங்கியிருக்கிறது.

தமிழருக்கு எதிராக இச்சட்டம் பாய்ந்த போது நான்கு தசாப்த காலமாக அதீத மௌனம் பேணி, அந்தச் சட்டத்திற்கு ஏதோ ஒரு வகையில் ஆதரவு காட்டிய இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும், இப்போது அச்சட்டம் ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராடிய சிங்கள மாணவர் தலைவர்களுக்கும் பிக்குவுக்கும் எதிராகப் பாய்ந்ததும் மௌனம் கலைத்திருக்கின்றனர். துடிக்கின்றனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நடக்கும் 'கிரிமினல்' துஷ்பிரயோகங்கள் இப்போதுதான் அவர்களின் கண்களுக்குத் தென்படுகின்றன.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் பயங்கரவாதம் தொடர்பில் தெளிவான வரையறை இல்லை என்பதால் இந்தச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படும் அபாயம் உள்ளதாக அந்தச் சங்கத்தின் தலைவர் இப்போது தெரிவித்துள்ளார்.

தமிழினத்திற்கு எதிராக நான்கு தசாப்த காலம் இந்தச் சட்டம் கொடூரமாகப் பாய்ந்த போது இந்த விளக்கம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துக்கு புரிந்து இருக்கவில்லை! சிங்களவருக்கு எதிராகவும் இச்சட்டம் பாயும் போதுதான் அவர்களுக்கு 'ஞானம்' பிறக்கின்றது.

இந்த அமைப்புக்கள் இன்று கூறுவது சரியாக இருக்கலாம். ஆனால் அந்தச் சரியை – நீதியை – உரைக்கும் அடிப்படைத் தகுதி கூட அவற்றுக்கு இல்லை என்பதுதான் உண்மை. ஏனெனில் நான்கு தசாப்தங்கள் இது விடயத்தில் வேண்டுமென்றே அமைதி பேணி, அந்தக் கொடூரத்துக்குத் துணை போனவர்களே அவர்கள்தான்...!

# குடத்தனை உப தபாலகருக்கு எதிராக 2 ஆவது நாளாக மக்கள் போராட்டம்

யாழ். குடத்தனை உப தபாலகருக்கு எதிராக இரண்டாவது நாளாக நேற்று (செவ்வாய்க் கிழமை) பாதிக்கப்பட்ட மக்கள்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 2018 ஆம் ஆண்டு வரை உப தபாலதிபராகப் பணியாற்றி வந்தவர் வறிய மக்களது பொதுசன மாதாந்தக் கொடுப்பனவு, மின்சார பட்டியல் கொடுப்பனவு, தேசிய சேமிப்பு வங்கி உட்பட பல்வேறு மக்கள் நிதிகளை மோசடி செய்தும் மதி நுட்பமாக ஏமாற்றியும் உள்ளார் எனக் கூறப்படுகின்றது. இதனால் பாதிக்கப்பட்ட மணல்காடு, குடத்தனை, அம்பன் பகுதிகளைச் சேர்ந்த பலரும் கடந்த திங்கட்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர். இரண்டாவது நாளாக நேற்றும் போராட்டம் தொடர்ந்தது.

மேற்படி குடத்தனை உப தபாலகத்தில் பணியாற்றி வந்த அந்த அதிகாரி மக்கள் பண மோசடி தொடர்பில் தாமாகவே பதவியிலிருந்து விலகினார் எனவும், பதவியிலிருந்து நீங்கிய நிலையில் மீண்டும் 3 ஆண்டுகளின் பின்னர் தபால் திணைக்களத்தால் ஏதோ ஒருவகையில் பணி மீள் நியமனம் பெற்று உபதபாலகர் பணியில் இணைக்கப்பட்டுள்ளார் எனவும் கூறப்பட்டது.

இதனை அறிந்து கொண்ட – பாதிக்கப்பட்ட – மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்வேளை சம்பவ இடத்திற்கு பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி வருகை தந்தார். பாதிக்கப்பட்ட மக்களை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறும், மேற்படி உப தபாலகர் இனி குடத்தனை உப தபாலகத்திறக்கு பணிக்கு வருகை தர மாட்டார் எனவும் தலைமை பொலிஸ் பரிசோதகர் பிரியந்த அமரசிங்க கடந்த திங்கட்கிழமை உத்தரவாதம் அளித்துள்ளார்.

எனினும் மீண்டும் நேற்று (செவ்வாய்க் கிழமை) உபதபாகலர் பணிக்காக வந்த வேளை அங்கு தமது பணத்தைக் கேட்கச் சென்ற பாதிக்கப்பட்ட மக்களைக் கண்டவுடன் அலுவலகத்தைத் திறந்தும் உள் செல்லாமல் அவர் வெளியேறியுள்ளார்.

இதே வேளை மேற்படி மோசடிகள் தொடர்பில் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதிராக தபால் திணைக்களம் செயற்பட்டு வருவதாக மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதேவேளை அந்த அதிகாரி தான் நிரந்தரமாகப் பணியிலிருந்து விலகுகிறார் என அறிவித்துச் சென்ற வேளை, அங்கு அதுவரை எந்தவிதஒ பிரதி உபகாரமும் இன்றி நான்கரை ஆண்டுகள் பதில் கடமை ஆற்றியவரையும் பணியிலிருந்து இடைநிறுத்தியிருந்தார் என்றும் கூறப்பட்டது.

# மன்னார் திருக்கேதீஸ்வரர் ஆலய சங்காபிஷேகம் சிறப்புற நடந்தது!



(மன்னார் நிருபர்)

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மகா கும்பாபிஷேக பெருவிழா கடந்த மாதம் 6 திகதி இடம் பெற்றதை தொடர்ந்து 48 நாள்கள் மண்டல அபிஷேகம் இடம் பெற்று நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை சங்காபிஷேக நிகழ்வு வெகு விமரிசையாக நடந்தேறியது..

திருக்கேதீஸ்வர ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ தியாகராஜா கருணானந்தகுருக்கள்தலைமையில் தர்ம ஆதீன மடத்தின் இலங்கைக்கான முதல்வர் ஸ்ரீமத் மீனாட்சி சுந்தரம் தம்பிரான் முன்னிலையில் சங்காபிஷேக நிகழ்வு நடந்தது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 9 மணிக்கு பிரதான யாகங்கள், பரிவார மூர்த்திகளுக்கான யாகங்கள் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து கும்பங்கள் உள்வீதியுலா எடுத்துவரப்பட்டு பிள்ளையார், சிவன் அம்பாள் ஆகியோருக்கு கும்ப நீர் ஊற்றப்பட்டு வெகு விமர்சையாக 1008 சங்காபிஷேகம் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து திருக்கேதீஸ்வர தேனமுது கும்பாபிகே விசேட மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது.

கொழும்பு இந்துக்கல்லூரியின் ஓய்வு நிலை முதல்வர் நூலாசிரியர் தம்பிப்பிள்ளை முத்துக் குமாரசுவாமி நூலை வெளியிட்டு வைக்க, தர்ம ஆதீன இலங்கைக்கான முதல்வர் ஸ்ரீமத் மீனாட்சி சுந்தரம் தம்பிரான் நூலை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை மாவட்டத்தில் மீண்டும் காட்டு யானைகளின் தொல்லை





(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனை, சம்மாந்துறை, நாவிதன்வெளி, கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர் பிரதேச செயலகப் பிரிவுகளில் மீண்டும் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளதாகவும் இதனை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர், நாவிதன்வெளி, நற்பிட்டிமுனை, அஷ்ரப் நகர் ஆகிய பகுதிகளில் காட்டு யானைகளின் தொல்லை மீண்டும் அதிகளவில் காணப்படுகின்றது. இதனால் இந்தக் கிராமங்களில் மக்கள் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுள்ளனர்.

மாலை மற்றும் இரவு வேளைகளில் கிராமங்களுக்குள் உட்புகும் யானைகள் குடியிருப்புப்பகுதிமற்றும்சிறுபோகநெற்செய்கை நிலங்கள், பெருமளவான பயன்தரும் மரங்கள், பயிர்கள் போன்றவற்றை அழித்து வருகின்றன. இந்தப் பகுதிகளில் காட்டு யானைகளைக் கட்டுப்படுத்த கடந்த காலங்களில் யானை வெடிகளை வனஜீவராசி திணைக்களம் பொதுமக்களுக்கு வழங்கி இருந்தது.

எனினும் யானைகளின் அச்சு றுத்தல் தொடர்ந்த வண்ணமே உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. யானைகளைக் கட்டுப்படுத்துவதுக்கு மாற்று வழியை ஏற்படுத்தித் தருமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

புதன்கிழமை 24.08.2022

# உக்ரைன் சுதந்திர தினமான இன்று ரஷ்யா தாக்கினால் பலமான பதிலடி!



## அதிபர் ஜெலென்ஸ்கி எச்சரிக்கை

கீவ்,ஓக.24

தங்களது சுதந்திர தினமான இன்று அதையொட்டி ரஷ்யா தங்கள் மீது தாக்குதல் நடத்தினால், அதற்கான பதிலடி மிகவும் சக்திவாய்ந்ததாக இருக்கும் என்று உக்ரைன் அதிபா ஜெலென்ஸ்கி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உக்ரைனில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள போலந்து அதிபர் அண்ட்ரேஸ் டூடாவுடன் இணைந்து தலைநகா கீவில் செய்தியாளாகளை நேற்று செவ்வாய்க்கிழமை சந்தித்த ஜெலென்ஸ்கி, இது குறித்து கூறியவை வருமாறு:-

சோவியத் யூனியனிலிருந்து உக்ரைன் பிரிந்ததைக் குறிக்கும் சுதந்திர தினம் இன்று கொண்டாடப்படுகிறது. அந்த நாளை முன்னிட்டு, ரஷ்யா மிக மோசமான தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அத்தகைய நடவடிக்கைகளை ரஷ்யா மேற் கொண்டால், அதற்கான உக்ரைனின் பதிலடி மிக சக்திவாய்ந்ததாக இருக்கும் என்றார் அவர். ரஷ்யப் படையெடுப்பு நடந்து 6 மாதங்கள் நிறைவடைகிறது. அதே நாளில் சோவியத் யூனியலிருந்து பிரிந்ததை சுதந்திர தினமாக உக்ரைன் கொண்டாடுகிறது. அந்த நாளில், உக்ரைனின் அரசுக் கட்டடங்கள் உள்ளிட்ட முக்கிய நிலைகள் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தலாம் என்று அஞ்சப்படுகிறது. இந்தச் சூழலில், அத்தகைய தாக்குதல்களுக்கு சக்திவாய்ந்த பதிலடி கொடுக்கப்படும் என்று அதிபா ஜெலென்ஸ்கி தற்போது எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# உக்ரைனில் இன்று தாக்குதல் மிகவும் மோசமாக இருக்கலாம்

## அமெரிக்கத் தரப்பும் எச்சரிக்கை

உக்ரைனின் சுதந்திர தினம் இன்று கொண்டாடப்படும் நிலையில் அந்நாடு மீது ரஷ்யா தாக்குதல்களைத் தீவிரப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாக அமெரிக்கா எச்சரித்துள்ளது.

போரின் காரணமாக லட்சக் கணக்கான உக்ரைன் மக்கள் அண்டை நாடுகளில் தஞ்சம் புகுந்தாலும், தாய் நாட்டை விட்டு வெளியேற விரும்பாத பல லட்சம் மக்கள் உக்கிரமான போருக்கு நடுவே வாழ்க்கை நடத்தி வருகின்றனர். குண்டு வீச்சு மற்றும் துப்பாக்கிச் சூட்டுக்கு மத்தியில் இயல்பு வாழ்க்கையை வாழ அவர்கள் பழகி விட்டனர். போரின் 6 ஆவது மாதத்தை நிறைவு செய்யும் இன்று உக்ரைன் தனது 33 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடுகிறது.

இதையொட்டி ரஷ்யா தனது தாக்குதல்களை தீவிரப்படுத்தும் என்றும், எனவே மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் எனவும் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி ஏற்கனவே எச்சரித்துள்ளார்.

இந்த நிலையில் உக்ரைன் சுதந்திரமான இன்று உக்ரைனில் மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளை குறிவைத்து ரஷ்ய ராணுவம் வான்வழி தாக்குதல்களை தீவிரப்படுத்தக்கூடும் என அமெரிக்கப் புலனாய்வு அமைப்பு எச்சரித்துள்ளது.

நாடு முழுவதும் உள்ள சிவில் உள்கட்டமைப்புகள் மற்றும் அரசுக்கு சொந்தமான இடங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட வாய்ப்புள்ளதாக உக்ரைன் தலைநகர் கீவில் உள்ள அமெரிக்க தூதரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது. எனவே இன்னும் உக்ரைனில் தங்கியிருக்கும் அமெரிக்கர்கள் உடனடியாக அந்த நாட்டை வெளியேற வேண்டும் என அது அறிவுறுத்தியுள்ளது.

இதுபற்றி அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்–

உக்ரைன் முழுவதும் பாதுகாப்பு நிலைமை மிகவும் நிலையற்றது. நிலைமை இன்னும் மோசமடையக்கூடும் என்பதால் உக்ரைனில் இருக்கும் அமெரிக்கர்கள் தரைவழி போக்குவரத்தை பயன்படுத்திபாதுகாப்பாக வெளியேறதூதரகம் கேட்டுக்கொள்கிறது – எனக் கூறப்பட்டுள்ளது. இதனிடையே ரஷ்யத் தாக்குதல் அச்சுறுத்தல் இருப்பதால் தலைநகர் கீவ் உள்பட முக்கிய நகரங்களில் சுதந்திர தின பேரணிகள், கூட்டங்கள் போன்ற பொதுமக்கள் அதிகம் கூடும் நிகழ்வுகளை நடத்த உக்ரைன் அரசு தடைவிதித்துள்ளது.

# நீதித்துறைக்கு எதிராக டிரம்ப் வழக்குத் தாக்கல்

வொஷிங்டன்,ஓக.24

உரிய தகவல் தெரிவிக்காமல் தனது வீட்டில் சோதனை நடத்திய விவகாரத்தில் அமெரிக்க நீதித்துறைக்கு எதிராக புளோரிடா நீதிமன்றத்தில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டிரம்ப் வழக்கு தொடர்ந்துள்ளார்.



கடந்த 8 ஆம் திகதி புளோரிடா மாகாணத்தில் டிரம்ப் வீட்டில் எவ்.பி.ஐ. அதிகாரிகள் அதிரடி சோதனை நடத்தினர்.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டிரம்ப் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் வெள்ளை மாளி கையில் இருந்து வெளியேறியபோது அரசு தொடர்பான பல இரகசிய ஆவணங்களைத் தன்னுடன் எடுத்துச் சென்றார் எனக் குற்றச் சாட்டுகள் எழுந்தன. இதுப்பற்றி அமெரிக்க நீதித்துறை விசாரணை நடத்தி வரும் நிலையில் கடந்த 8 ஆம் திகதி புளோரிடா மாகாணத்தில் டிரம்ப் வீட்டில் எவ்.பி.ஐ. அதிகாரிகள் அதிரடி சோதனை நடத்தினர். இதற்கு டிரம்ப் கடும் எதிர்ப்பு தெரிவித்தார். டிரம்ப் வீட்டில் நடத்தப்பட்ட சோதனையில்ரகசிய ஆவணங்கள் அடங்கிய 11 பெட்டிகள் கைப்பற்றப்பட்டன என எவ்.பி.ஐ. அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனால் தான் எந்தத் தவறும் செய்யவில்லை என்றும், கைப்பற்றப்பட்டவைரகசிய ஆவணங்கள் அல்ல என்றும் அவர் கூறினார்.

இந்த நிலையில் உரிய தகவல் தெரிவிக்காமல் தனது வீட்டில் சோதனை நடத்திய விவகாரத்தில் அமெரிக்க நீதித்துறைக்கு எதிராக புளோரிடா நீதிமன்றத்தில் டிரம்ப் வழக்கு தொடர்ந்துள்ளார். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், தனது வீட்டில் நடத்தப்பட்ட சோதனை அரசியல் நோக்கங்களுக்கானது என்றும், அடுத்த ஆண்டு நடக்கும் ஜனாதிபதி தேர்தலில் தான் போட்டியிடுவதைத் தடுப்பதற்கான முயற்சி என்றும் டிரம்ப் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும் தனது வீட்டில் இருந்து கைப்பற்றபட்ட ஆவணங்கள் மீதான நீதித் துறையின் விசாரணையை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

# சூடானில் கன மழை 88 பேர் வரை மரணம்



சூடானில் கடந்த ஜூன் முதல் பெய்து வரும் கனமழைக்கு பலியானவாகளின் எண்ணிக்கை நேற்றுசெவ்வாய்க்கிழமை 88ஆக உயாந்தது.

பல கிராமங்களில் தொடாந்து மழை பெய்து வருவதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

சூடானில் பருவமழை ஜூனில் தொடங்கி செப்டம்பா வரை நீடிக்கும். ஓகஸ்ட் மற்றும் செப்டம்பரில் அது அதிகபட்ச அளவை எட்டும் என கூறப்படுகிறது. இந்தச் சூழலில், நடப்பாண்டு பருவமழைக்கு இதுவரை 88 போ பலியாகியுள்ளனா் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ராஜஸ்தானில் தொடர் கனமழை பல மாவட்டங்கள் வெள்ளத்தில்!



ராஜஸ்தானில் தொடர் கனமழை, வெள்ளத்தால் பல மாவட்டங்கள் மூழ்கியுள்ள நிலையில், மீட்பு பணியில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

குறிப்பாக ஜலாவர், தோல்பூர், பாரன் மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. பாரன், ஜலாவர் மாவட்டங்களில் நீரால் சூழப்பட்ட பகுதிகளில்இருந்துஐம்பதுக்கும் மேற்பட்டோர் இந்திய விமானப் படையின் ஹெலிக்கொப்டர் மூலம் மீட்கப்பட்டுள்ளனர். கோட்டா, பாரன், ஜலாவர், புண்டி மாவட்டங்களில் பள்ளிகள் மூடப்பட்டுள்ளன.

மாநிலத்தின் சம்பல், பர்வான், பார்வதி, காளிசிந்த் ஆகிய ஆறுகள் பொங்கிப் பாயும் நிலையில், அணைக்கட்டுகளில் இருந்து உபரிநீர் திறந்து விடப்பட்டுள்ளது. உதய்ப்பூர், சித்தோர்கர், பிரதாப்கர் ஆகிய நகரங்களின் பல பகுதிகள் நீரால் சூழப்பட்டுள்ளதால் மக்கள் அவதிக்குள்ளாகி இருக்கின்றனர்.

முன்னதாக வெள்ளப் பகுதியில் சிக்கிய 53 பேர் படகுகள் மூலம் மீட்கப்பட்டுள்ளனர் எனவும், மேலும் 49 பேர் விமானப் படை ஹெலிக்கொப்டர் மூலம் மீட்கப்படுவார்கள் என்றும் ஜலாவர் மாவட்ட கலெக்டர் பாரதி தீக்சித் கூறினார். சம்பல் நதியில் வெள்ளம் அதிகரித்துவரும் நிலையில், கராலி பகுதியில் பல கிராம மக்கள் பாது காப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப் பட்டுள்ளனர்.

வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் பல கிராமங்கள் வெளித்தொடர்பு துண்டிக்கப்பட்டு தனித்தீவுகளாகி உள்ளன. அந்தக் கிராம மக்களுக்கு உணவு, குடிதண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் பன்ஸ்வாரா, துங்கர்பூர் மாவட்டங்களில் கன முதல் மிக கனமழையும், பில்வாரா, சித்தோர்கர் மாவட்டங்களில் கனமழையும் தொடரும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளதால் அம்மாவட்ட மக்கள் கவலை அடைந்துள்ளனர்.

## தமிழகம் எங்கும் விநாயகர் சிலைகள் ஒரு லட்சத்து 25 ஆயிரம் இடங்களில்



தமிழகம் முழுவதும் விநாயகர் சதுர்த்தி விழா வருகிற 31ஆம் திகதி கொண்டாடப்பட உள்ளது. கொரோனாப் பரவல் காரணமாக கட ந்த 2 ஆண்டுகளாக நடைபெறாமல் இருந்த திருவிழா உள்ளிட்ட கொண்டாட்டங்கள் தற்போது எந்தவித கட்டுப்பாடுகளும் இன்றி நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் விநாயகர் சதுர்த்தி விழாவை கொண்டாட ஏற்பாடுகளும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இந்து முன்னணி அமைப்பின் சார்பில் ஆண்டுதோறும் அதிக எண்ணிக்கையிலான இடங்களில் விநாயகர் சிலைகளை வைத்து வழிபாடு செய்வார்கள். கடந்த இரு ஆண்டுகளாக பல்வேறு கட்டுப்பாடுகள் விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டங்களுக்கு தடையாக இருந்தன. இந்த நிலையில் கட்டுப்பாடுகள் முழுமையாக நீங்கி இருப்பதால் எப்போதும் போல விநாயகர் சதுர்த்தி சிறப்பாக கொண்டாட அவர்கள் திட்டமிட்டு உள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை அவர்கள் தீவிரமாக மேற்கொண்டு வருகிறார்கள்.

இந்த ஆண்டு இந்து முன்னணி சார்பில் 1 லட்சத்து 25 ஆயிரம் இடங்களில் விநாயகர் சிலைகளை வைத்து வழிபாடு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை அனைத்து மாவட்டங்களிலும் இந்து முன்னணி நிர்வாகிகள் தொடங்கி உள்ளனர்.

சென்னையில் 5500 இடங்களில் விநாயகர் சிலைகளை வைத்து வழிபாடு செய்ய இந்து முன்னணி அமைப்பினர் முடிவு செய்திருக்கிறார்கள்.

## காங்கிரஸ் தலைவர் தேர்வதலுக்கான திகதியை முடிவு செய்ய ஆலோசனை

புதுடெல்லி,ஓக.24

இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சியின் அடுத்த தலைவரைத் தேர்வு செய்வதற்கான தேர்தல் திகதியை உறுதி செய்வது குறித்து ஆலோசனை செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக் கூட்டம் வரும் 28 ஆம் திகதி நடைபெற உள்ளது. காணொலி வாயிலாக இந்தக்கூட்டம் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற இருப்பதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் கேசி வேணுகோபால் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைவர் சோனியா காந்தி தலைமையில் நடைபெறும் செயற்குழுக் கூட்டத்தில் காங்கிரஸ் கட்சியின் அடுத்த தலைவரை தேர்வு செய்வதற்கான தேர்தல் திகதியை உறுதி செய்வது குறித்து ஆலோசனை செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராகுல் காந்திதான் காங்கிரஸ் கட்சியின் தலைவராக பொறுப்பேற்க வேண்டும் என்று அக்கட்சியின் மூத்த தலைவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

## ராகுலின் தமிழக நடைப்பயணத்துக்கு கோடிக் கணக்கான ரூபா நிதி கறப்பு!



தமிழகத்தில் நடைபயணம் மேற்கொள்ளும் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுலுக்கு வரவேற்பு அளிக்கவும், கட்சியினர் கூட்டத்தைத் திரட்டவும், தமிழக காங்கிரஸ் சார்பில், கோடிக் கணக்கான ரூபா நிதி வசூலிக்கப்படுகிறது.

'இந்தியா எல்லாருக்குமான நாடு' என்ற கோத்துடன் ராகுல், செப்ரெம்பத் 7 இல் கன்னியாகுமரியில் நடைபயணம் தொடக்குகிறார். இந்த பயணத்திற்கு, 'இந்திய ஒற்றுமை யாத்திரை' என, பெயரிடப்பட்டு உள்ளது. இந்த நடைபயணம், 148 நாள்களில், 3,700 கிலோ மீற்றர் தூரம் கடந்து, காஷ்மீரில் முடிக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

தமிழகத்தில் நடைபயணம் செல்லும் ராகுலுக்கு வரவேற்பு அளிக்கவும், அவர் நடந்து செல்லும் போது அவருடன் செல்ல கூட்டத்தைத் திரட்டவும், தமிழக காங்கிரஸ் தலைவர் அழகிரி, ஏற்பாடுகளை செய்து வருகிறார்.

திராவிடக் கட்சிகளின் மாநாட்டிற்கு செல்லும் வாகனங்களை போல, நடைபயணத்திற்கும் வாகனங்களை ஏற்பாடு செய்யவும், தொண்டர்களுக்கு தங்கும் வசதி, உணவு வழங்கவும், காங்கிரஸ் நிர்வாகிகளுக்கு உத்தரவிடப்பட்டு உள்ளது.

இதற்கான செலவுக்கு, கட்சியில் இருந்து பணம் தரப்படாது என்பதால், எம்.பி. மற்றும் எம்.எல்.ஏக்கள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகளிடம் வசூலிக்குமாறு, மாவட்ட தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு உள்ளது. ராகுல் நிகழ்ச்சிக்கான செலவு நிதிக்கு தாராளமாக பணம் வழங்குமாறு, கட்சியினருக்கு மேலிடமும் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக, சென்னை சத்தியமூர்த்தி பவனில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில், முன்னாள் எம்.எல்.ஏ., அருள் அன்பரசு, தன் நான்கு மாத ஓய்வூதியமான 1 லட்சம் ரூபா வழங்குவதாக அறிவித்துள்ளார். அவரைத் தொடர்ந்து, எம்.பி.க்களில் அதிகபட்சமாக கார்த்தி சிதம்பரம் 30 லட்சம் ரூபாவும், முன்னாள் தலைவர் திருநாவுக்கரசர் 20 லட்சம் ரூபாவும், முன்னாள் பொருளாளர் நாசே ராமச்சந்திரன் 25 லட்சம் ரூபாவும் வழங்க உள்ளனர்.

மற்ற எம்.பி.,க்கள் தலா 15 லட்சம் ரூபா தர அறிவுறுத்தப்பட்டு உள்ளனர். காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் 18 பேரில், பணம் படைத்த ரூபி மனோகரன், அசோகன், ஊர்வசி செல்வராஜ் போன்றவர்களிடம் தலா 25 லட்சம் ரூபாவும், மற்ற எம்.எல்.ஏக்களிடம் தலா 5 லட்சம் ரூபாவும் வசூலிக்கத் திட்டமிடப்பட்டு உள்ளது.

## மருத்துவ பரிசோதனைகளுக்காக வெளிநாடு செல்கின்றார் சோனியா

புதுடில்லி,ஓக.24

மருத்துவ பரிசோதனைக்காக காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி வெளிநாடு செல்கிறார். அவருடன், ராகுல், பிரியங்காவும் உடன் செல்கின்றனர்.

எனினும் அவர் எப்போது, எந்த நாட்டுக்குச் செல்கிறார் என்ற தகவல் வெளியாகவில்லை.



ஜனாதிபதி திரரௌபதி முர்முவை காங்கிரஸ் தலைவர் சோனியா நேற் றுச் சந்தித்தார். பூங்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தார்

காங்கிரஸ் கட்சியில், உட்கட்சி பூசல் உச்சகட்டத்தை எட்டி உள்ளது. மூத்த தலைவர்களான குலாம் நபி ஆசாத், ஆனந்த் சர்மா உள்ளிட்டோர் கட்சி வழங்கிய பொறுப்புகளில் இருந்து இராஜினாமாச் செய்துவிட்டனர்.

இச்சூழ்நிலையில், நேற்று ஜனாதிபதி மாளிகையில், ஜனாதிபதி முர்முவை, காங்கிரஸ் தலைவர் சோனியா சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

இந்நிலையில், மருத்துவ பரிசோதனைக்காக சோனியா வெளிநாடு செல்ல உள்ளார். அவருடன், ராகுல் மற்றும் பிரியங்காவும் உடன் செல்கின்றனர். இதனை அக்கட்சியின் மூத்த தலைவர் ஜெய்ராம் ரமேஷ் கூறியுள்ளார்.

சோனியா நாடு திரும்பும் வழியில் இத்தாலியில் அவரது தாயாரைச் சந்திக்கவும் திட்டமிட்டுள்ளார் எனக் கூறினார்.

# மருதமுனை விளையாட்டரங்கில் இனி மின்னொளி விளையாட்டுகளுக்குத் தடை

(அஸ்லம் எஸ்.மௌலானா)

மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டரங்கில் மின்னொளி விளையாட்டுப் போட்டிகளைத் தடை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்துள்ளார்.

மருதமுனையிலுள்ள பல சமூக சேவை அமைப்புகள் விடுத்த வேண்டுகோளுக்கமைவாக இத்தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்–

மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டரங்கில் இடம்பெறுகின்ற மின்னொளி விளையாட்டுப் போட்டிகளால் இரவு நேரங்களில் இப்பிரதேச இளைஞர்கள் மற்றும் மாணவர்களில் சிலர் போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்து



காணப்படுவதாகவும், ஒழுக்க நெறிமுறை, கட்டுக்கோப்பு சீர்குலைந்து வருவதாகவும், வணக்க வழிபாடுகளில் பாதிப்பு ஏற்படுவதாகவும், மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் கவனம் செலுத்துவது குறைவடைந்து செல்வதாகவும் எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அத்துடன் ஜீ.சி.ஈ உயர்தரப் பரீட்சைக்கான காலம் நெருங்கி வருகிறது. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் மின்சார நெருக்கடிக்கு மத்தியில் மின்னொளி விளையாட்டுக்கள் மேலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

இவ்வாறான காரணங்களை மையப்படுத்தி மின்னொளி விளையாட்டுப் போட்டிகளை உடனடியாகத் தடை செய்யுமாறு பொது அமைப்புகள் என்னிடம் கோரிக்கை விடுத்து வருகின்றன.

இதையடுத்தே கல்முனை மாநகர சபை நிர்வாகத்தின் கீழுள்ள மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டரங்கில் ஊர், சமூக நலன் கருதி, மறு அறிவித்தல் வரை மின்னொளி விளையாட்டுப் போட்டிகளுக்கு அனுமதி வழங்குவதில்லை என்ற தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. – என்றார்.

# அம்பாறை சகவாழ்வு குழுக்கள் நுவரெலியா பகுதிக்கு விஜயம்



(காரைதீவு நிருபர் சகா)

இலங்கை உள்ளூராட்சி மன்ற சம்மேளனத்தின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சகவாழ்வு குழுக்கள் நேற்று செவ்வாய்க்கிழமை நுவரெலியாவிற்கு விஜயம் செய்தது.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள காரைதீவு,பொத்துவில், லாகுகலஆகிய மூவினங்களையும் பிரதிபலிக்கின்ற பிரதேச சபைகளின் சகவாழ்வு குழுக்கள் இதிலே கலந்து கொண்டன.

மூன்று சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் சகவாழ்வு குழு உறுப்பினர்கள் இந்த விஜயத்தின் போது கலந்து கொண்டிருந்தார்கள்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை இம்மூன்று பிரதேச சபைகளின் சகவாழ்வு குழுக்கள், காரைதீவில் இருந்து தமது பயணத்தை மேற்கொண்டன.

இன்று புதன்கிழமை நுவரெலியா மாநகர சபை மண்டபத்திலே சந்தித்து அங்கு சகவாழ்வு குழுக்களின் முன்னேற்றம் பற்றி கலந்துரையாட இருந்தனர். இலங்கை உள்ளாட்சி மன்ற சம்மேளனத்தின் தேசிய இணைப்பாளர் பெருமாள் பிரதீப் தலைமையிலே இந்த கலந்துரையாடல் இடம் பெற இருந்தது.

இந்த நுவரெலியா விஜயம் தொடர்பாக, காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் தெரிவிக்கையில்–

இன்று நாட்டுக்கும், உலகத்துக்கும் தேவையானது சகவாழ்வு, ஐக்கியம், நல்லிணக்கம் ,இன உறவு என்பதே. ஆனால் துரதிர்ஷ்டவசமாக அதை இழந்து உலகமே தவித்துக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் உள்ளாட்சி மன்ற சம்மேளனம் இப்படிப்பட்டதொரு வேலைத் திட்டத்தை தயாரித்து, சகவாழ்வு குழுக்களை அமைத்து இனங்களுக்கு இடையே நல்லுறவை ஏற்படுத்துவது மகிழ்ச்சி தருகின்ற விடயம் ஆகும்.– என்றார்.

# சிவில் அமைப்புக்களின் ஐக்கிய செயற்பாடு சாய்ந்தமருது ஒன்றுகூடலில் வலியுறுத்தல்

(நூருல் ஹுதா உமர்)

எமது நாடும் பிரதேசமும் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி, தலை விரித்தாடும் போதைப்பொருள் பிரச்சினை, சமூக விரோத செயல்கள் போன்றவற்றுக்கு நாம் முகம் கொடுப்பதற்காக சகல சிவில் அமைப்புக்களும் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும் பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் தெரிவித்தார்.

சாய்ந்தமருது பிரதேச செயலகத்திற்குட்பட்ட சிவில் அமைப்புகளின் வருடாந்த ஒன்றுகூடல் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் சமூக சேவை உத்தியோகத்தர் ஏ. அஹமட் சபீரின் நெறிப்படுத்தலில் பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் தலைமையில் நடைபெற்றது.இதில் சாய்ந்தமருது பிரதேச செயலத்தில் பதிவு செய்யப்பட்ட 25க்கு மேற்பட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதன் போது பிரதேச செயலாளர் மேலும் தெரிவிக்கையில்–

இளைஞர்கள், மாணவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையாக்கப்பட்டு இப்பிரச்சினை மிக மோசமாகத் தலைவிரித்தாடுகின்றது. அதனை ஓரளவேணும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தாலும் முற்றாக தடை செய்வதில் பல சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

சாய்ந்தமருதில் பாவனையில் இல்லாத சில அரச காணிகளை ஆக்கிரமிப்பு செய்வதிலும் சிலர் முட்பட்டனர். நீதிமன்றத்தை நாடி அவற்றுக்குத் தீர்வைப் பெற்றோம்.

நாம் அனைவரும் ஒருமித்து செயற்படுவோமாக இருந்தால் இந்தப் பிரச்சினைகளிலிருந்து எமது பிரதேசத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியும். அதற்கமைவாக இன்று கூடியுள்ள அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து சிவில் அமைப்புக்களின் சம்மேளனம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்து செயற்படுதல் வேண்டும். அதற்கான முழு ஒத்துழைப்பு என்னால் வழங்க முடியும். – என்றார்.


இதன்போது சமூகத்தின் எதிர்காலகருதி முதியோர் நலத்திட்டங்கள், சிறுவர் நலத்திட்டங்கள், போதைப்பொருள் பாவனை தொடர்பான விழிப்புணர்வு, போதைப்பொருளுக்கு அடிமைப்பட்டவர்களுக்கான புனர்வாழ்வளித்தல், பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கான நலத்திட்டங்கள், விசேட தேவையுடைய பயனாளிகளுக்கான நலத்திட்டங்கள், பாடசாலை இடைவிலகள் மாணவர்களை நெறிப்படுத்தலும் அவர்களுக்கான நலத்திட்டங்கள் போன்ற செயற்பாடுகளை எதிர்காலத்தில் செயற்படுத்துவது எனவும் இதன்போது தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.






# நல்லூர் கந்தனின் சித்திரத்தேர் வெள்ளோட்டம்
















(ஆர்.கலையமுதன்)

சரித்திரப் புகழ்மிக்க யாழ்ப்பாணம் – நல்லூர் கந்தசுவாமி கோயிலின் புனருத்தாரணம் செய்யப்பட்ட சித்திரத் தேர் வெள்ளோட்டம் இன்று காலை 7 மணியளவில் நடைபெற்றது. பெருமளவான பக்தர்கள் புடைசூழ சித்திரத் தேர் வெள்ளோட்டம் இடம்பெற்றது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பரிபாலகர்களான மாப்பாண முதலியார் பரம்பரையில் வந்துதித்த மூன்றாம் இரகுநாத மாப்பாண முதலியார் காலத்தில் ஆலயத்துக்கான முதலாவது தேர் உருவாக்கப்பட்டது.

அதன்பின்னர் இரண்டாம் ஆறுமுக மாப்பாண முதலியார் அழகன் முருகனுக்கான தங்க ஆபரணங்கள் மற்றும் வெள்ளி சிங்காசனம் ஆகியவற்றைச் செய்து அழகன் முருகனை அழகு பார்த்தார். இவரது காலத்தில் சண்முகப் பெருமான் ஸ்தாபிக்கப்பட்டதுடன், சண்முகரே தேரில் ஏறி, பக்தர்களுக்கு அருள் பாலிக்கவும் தொடங்கினார். நல்லூரில் பாவனையில் இருந்த தேர் பழுதடைந்த நிலையில் இருந்த காரணத்தால், அதன் அபாயத்தை உணர்ந்த ஷண்முகதாஸ் மாப்பாண முதலியார், புதிய தேர் ஒன்றை 1964 ஆம் ஆண்டு திருப்பணி நிறைவேற்றி, தானும் வடம் பிடித்து இழுத்து இரதோற்சவத்தை இன்னும் அழகாக்கினார். அந்தத் தேரே மீண்டும் புனருத்தாரணத் திருப்பணி நிறைவுற்று இன்று வெள்ளோட்டம் கண்டது.

ஷண்முகதாஸ் மாப்பாண முதலியார் மறைவுக்குப் பின்னர் அவரது தம்பியாரான குமாரதாஸ் மாப்பாண முதலியார் நல்லூர் கோயிலின் 10 ஆவது கோயில் அதிகாரியாக, மிக இள வயதில் பொறுப்பேற்றார். நல்லூர் பக்தர்களைப் பொறுத்த வரையில் அழகன் முருகனுக்கு மிகவும் பிடித்த கோயில் அதிகாரியாக குமாரதாஸ் மாப்பாண முதலியார் கருதப்படுகின்றார். தொடர்ச்சியாக 55 வருடங்களுக்கு மேலாக இவர் முருகனுக்குத் தொண்டாற்றி வந்தார். இவர் கோயில் அதிகாரியாகப் பொறுப்பேற்ற 1965 ஆம் ஆண்டு தொடக்கம் நல்லூர் வருடாந்த மகோற்சவத்துக்கு முன்னர் வருடா வருடம் கோயிலுக்கான திருப்பணியை நிறைவேற்றினார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# 300 இற்கும் மேற்பட்ட பொருள்களின் இறக்குமதிகளுக்கு தற்காலிக தடை!



## வெளியானது அறிவிப்பு

நேற்று (செவ்வாய்க்கிழமை) முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 300 இற்கும் மேற்பட்ட பொருள்களின் இறக்குமதிகளுக்கு மறு அறிவித்தல் வரை தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இதற்கமைய, சொக்கலேட், வாசனை திரவியங்கள், ஆண்கள் மற்றும் பெண்களின் உடைகள், உள்ளாடைகள், கைக்கடிகாரங்கள், மின் கேத்தல்கள், உள்ளிட்ட 300 இற்கும் மேற்பட்ட பொருள்களின் இறக்குமதி இடைநிறுத்தப்பட்டுள்ளது. அந்நிய செலாவணி கையிருப்பை கையாளும் வகையில் இந்தத் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# கடவுச்சீட்டுகளை விரைவாக பெற்றுக்கொள்ள சிறப்பு வசதி





வெளிநாட்டு ஊழியர்களின் கடவுச்சீட்டுகளை விரைவாக வழங்குவதற்கானசிறப்புபகுதிதிறக்கப்பட்டுள்ளது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள குடிவரவு திணைக்களத்தில் இந்த சிறப்பு பகுதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முன்னோடித் திட்டமாக கடந்த திங்கட்கிழமை இந்த பகுதி திறக்கப்பட்டதுடன், அதன் வெற்றி யைக் கருத்தில் கொண்டு நேற்று (செவ்வாய்க் கிழமை) முதல் அனைத்து வெளிநாட்டு வேலை தேடுபவர்களுக்கும் இந்த வசதி அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் வெளிநாட்டு கடவுச்சீட்டுகளைபெற்றுக்கொள்வதில்ஏற்பட்டுள்ள நெரிசல் காரணமாக வெளிநாடு செல்ல எதிர்பார்க்கும் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பல சிரமங் களைத் தவிர்க்க முடியும் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, வெளிநாட்டுவேலைக்காகப் புறப்படுவதற்குத் தேவையான அடிப்படைப் பணிகளை நிறைவு செய்த விண்ணப்பதாரர்கள், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் வழங்கப்பட்ட கடிதத்தை திணைக்களத்தின் இந்த விசேட பகுதியில் சமர்ப் பித்து, தமது வெளிநாட்டுக் கடவுச்சீட்டை விரை வாகப் பெற்றுக்கொள்ளும் வசதி நேற்று முதல் வழங்கப் படவுள்ளது.

வெளிநாடு செல்லும் தொழிலாளர்களுக்காக எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் விமான நிலையத்தில் விசேட நுழைவு வாயில் திறக்கப்படும் எனவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனு நாணயக்கார தெரிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.





# பாவனைக்கு உதவாத கோதுமை மா பறிமுதல்!

## மன்னாரில் சம்பவம்

மன்னார் – மூர்வீதி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் உரிய அனுமதியின்றி பதுக்கி வைக்கப்பட்டிருந்த பாவனைக்கு உதவாத 50 கிலோ கிராம் நிறையுடைய 100 இற்கும் அதிகமான கோதுமை மா மூடைகள் மன்னார் பொது சுகாதார பரிசோதகர்களால் நேற்று (செவ்வாய்க்கிழமை) கைப்பற்றப்பட்டுள்ளது.

மன்னார் பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவு மற்றும் டி.சி.டி.பி. பிரதேச குற்றபுலனாய்வு பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மன்னார் மூர்வீதி பகுதி வீடு ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது பாவணைக்கு உதவாத உரிய முறையில் களஞ்சியப்படுத்தப்படாத 100 இற்கும் மேற்பட்ட கோதுமை மா மூடைகள் கைப்பற்றப்பட்டன.

கோதுமை மா மூடைகள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த அறைக்கு சீல் வைக்கப்பட்டு மூடப்பட்டுள்ளதுடன், மன்னார் பொது சுகாதார பரிசோதகர்களால் மா மூடைகளை களஞ்சியப்படுத்தி வைத்திருந்த நபருக்கு எதிராகவும் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது.

மேற்படி நபர் மன்னார் நகர் பகுதியில் வெதுப்பகம் ஒன்றை நடத்தி வருவருகின்றமையுடன் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னதாகவும், வெதுப்பகத்தில் பாவனைக்கு உதவாத மா மூடைகள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த நிலையில் சுகாதார பரிசோதகர்களால் கண்டறியப்பட்டு நீதிமன்றத்தில் வழக்குதாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அதே நேரம் வரும் நாள்களில் மன்னார் நகர் பகுதிகளில் உள்ள வெதுப்பகங்கள் மற்றும் உணவகங்கள் மற்றும் அவற்றின் களஞ்சியசாலைகள் சுகாதார பரிசோதகர்களால் சோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தையல் பயிற்சி நெறி மாணவிகளின் கண்காட்சி நேற்று நிலாவெளியில்!





(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் குச்சவெளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட நிலாவெளி மாதர் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் தையல் பயிற்சி நெறி மாணவர்களின் கண்காட்சி நேற்று இடம் பெற்றது.

நிலாவெளி பிரதேச சபை கட்டடத்தில் இடம் பெற்ற இக் கண்காட்சி நிகழ்வில் தையல் பயிற்சி மாணவிகளினால் தயாரிக்கப்பட்ட கைப்பணிப் பொருள்கள், ஆடை உற்பத்தி, பாரம்பரிய கைப்பணி பொருட்கள் என பல இதன் போது காட்சிப்படுத்தப்பட்டன.

இதில் கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் என்.தனஞ்செயன், குச்சவெளி பிரதேச செயலாளர் கே. குணநாதன், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.பத்மராஜா, பதில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ப.செந்தூரன், தையல் பயிற்சி நிலைய போதனாசிரியர் நிஹாரா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.08.2022இல் வெளியிடப்பெற்றது.